**<u>செய்தி வெளியீடு எண்.836</u>** **<u>நாள்.3.10.2008</u>**

## பத்திரிக்கை செய்தி

இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித் துறை
2008-2009 கல்வியாண்டிற்கான பட்டப்படிப்பு சேர்க்கை
**மறு சுழற்சிக்கான கலந்தாய்வு மற்றும் பகிரங்க கலந்தாய்விற்கான அறிவிப்பு**

இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித் துறையின் கீழ் செயல்பட்டு வரும் அரசு மருத்துவக் கல்லூரிகள் மற்றும் தனியார் சுயநிதி மருத்துவ கல்லூரிகளில் சேருவதற்கு **18.8.2008** முதல் **20.8.2008** முடிய நடைபெற்ற கலந்தாய்விற்கு பிறகு பல்வேறு இந்திய மருத்துவ பிரிவுகளில் அரசு மற்றும் சுயநிதி மருத்துவக் கல்லூரிகளில் காலியிடங்கள் ஏற்பட்டுள்ளன. மேற்கண்ட காலியிடங்களை நிரப்புவதற்கான மறு கலந்தாய்வு **7.10.2008** அன்று சென்னை, அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனை வளாகத்தில் உள்ள தேர்வுக்குழு அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. **18.8.2008** முதல் **20.8.2008** முடிய நடைபெற்ற கலந்தாய்வில் கலந்து கொண்டு இந்திய முறை மருத்துவ கல்லூரிகளில் சேர்ந்தவர்கள் மற்றும் காத்திருப்போர் பட்டியலில் உள்ள நபர்கள் மேற்கண்ட மறு கலந்தாய்வில் கலந்து கொள்ளலாம். மறுகலந்தாய்வில் கலந்து கொள்ளும் நபர்கள் தற்சமயம் பயிலும் கல்லூரி முதல்வரிடமிருந்து உரிய சான்றிதழ் (Bonafide Certificate) பெற்று வரவேண்டும். காத்திருப்போர் பட்டியலில் உள்ள நபர்கள் ஏற்கனவே இவ்வலுவலகத்தால் தெரிவிக்கப்பட்ட அனைத்து சான்றிதழ்களுடனும் உரிய கட்டணத் தொகையுடனும் கலந்து கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

பிஎஸ்எம்எஸ்/ பிஏஎம்எஸ்/ பிஎன்ஒய்எஸ்/ பியுஎம்எஸ்/ பிஎச்எம்எஸ் படிப்புகளுக்கு மறு கலந்தாய்வின் முடிவில் ஏற்படும் காலியிடங்களுக்கான பகிரங்க கலந்தாய்வு **7.10.2008** பிற்பகல் **4.00** மணியளவில் நடைபெறும்.

பகிரங்க கலந்தாய்வில் கலந்து கொள்ள விரும்பும் மாணவ மாணவியர் கீழ்க்கண்ட தகுதிகளை உடையவராக இருத்தல் அவசியம்.

1. விண்ணப்பதாரர் **31.12.2008** அன்று **17** வயது நிரம்பியவராக இருக்க வேண்டும். மேலும் உயர்நிலைத் தேர்வில் இயற்பியல், வேதியியல் மற்றும் உயிரியியல்/ தாவரயியல் மற்றும் விலங்கியல் படித்து முதல் தடவையில் தேர்வு பெற்றிருக்க வேண்டும்.
2. பட்டப்படிப்பிற்கான குறைந்தபட்ச தகுதி மதிப்பெண்கள் வருமாறு

இதரபிரிவினர் 50%, பிற்பட்ட வகுப்பினர், பிற்பட்ட வகுப்பினர் (மு), பிற்பட்ட வகுப்பினர் (கி) 45%, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் 40% மற்றும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி இனத்தவர் 35%.

3. பட்டப்படிப்பில் யுனானி படிப்பதற்கு குறைந்த பட்ச தகுதி மதிப்பெண் கிடையாது. ஆனால் உருது/ அராபிக்/ பெரிசியன் எவையேனும் ஒரு மொழியில் (எழுத மற்றும் படிக்க கண்டிப்பாக தெரிந்திருக்க வேண்டும்) தகுதிப்பெற்றிருத்தல் வேண்டும்.

பகிரங்க கலந்தாய்வில் கலந்து கொள்ள விரும்புகிறவர்கள் தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில் 4.10.2008 அன்றோ அல்லது அதற்குப் பின்னரோ இயக்குநர், இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித் துறை என்ற முகவரியில் பெறப்பட்ட ரூ.500/– மதிப்புள்ள சென்னையில் மாற்றத்தக்க வரைவேலைகள் இரண்டு தேர்வுக்குழு அலுவலகத்தில் சமர்ப்பித்து விண்ணப்பம் பெற்றுக் கொள்ளலாம். அவைகள் முறையே விண்ணப்பம் மற்றும் கலந்தாய்விற்கான கட்டணமாகும். மேலும் தேர்வு செய்யப்படும் மாணவ / மாணவிகள் ரூ.5000/– க்கான வங்கி வரைவோலையை சமர்ப்பிக்க வேண்டும். ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி வகுப்பினர்களுக்கு விண்ணப்பக் கட்டணத்திலிருந்து விலக்கு அளிக்கப் படுகிறது. மேலும் பூர்த்தி செய்யப்பட்ட இணைப்புகளுடன் கூடிய விண்ணப்பங்களை 7.10.2008 அன்று காலை 9.00 மணி முதல் மாலை 3.00 மணிக்குள் சமர்ப்பிக்க வேண்டும்.

மேலும் விவரங்களுக்கு வலைதளத்தினை பார்க்கவும் www.tn.health.org

தொலைபேசி எண் 044– 26216244, 26214844, 26281563

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.**